# பெறுகைக்கான அழைப்பு

## இலங்கை புகையிரத சேவை

**<u>கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள புகையிரத நிலைய வளாகங்களில் உள்ள கீழ்வரும் பொருட் களஞ்சியசாலை கட்டிடங்களை,பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காகவோ 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்</u>**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள புகையிரத நிலைய வளாகங்களில் உள்ள கீழ்வரும் பொருட் களஞ்சியசாலை கட்டிடங்களை,பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காகவோ 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன .
.

| தொடரிலக்கம் | களஞ்சியசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் | அளவு(ச.அ) | தொடரிலக்கம் | களஞ்சியசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் | அளவு(ச.அ) |
|---|---|---|---|---|---|
| 1 | ஹப்புத்தளை I | 1260 | 15 | திரகோலை | 1800 |
| 2 | ஹப்புத்தளை II | 1100 | 16 | ஹிக்கடவை | 800 |
| 3 | ஹப்புத்தளை III | 700 | 17 | மாத்தறை | 2250 |
| 4 | ஹப்புத்தளை IV | 600 | 18 | சிலாபம் | 2592 |
| 5 | ஹப்புத்தளை ஓய்வு மண்டப கட்டிடம் | 1593 | 19 | மாதம்பே | 1960 |
| 6 | ஹாலிஎல | 861 | 20 | மீரிகம | 1711 |
| 7 | உலப்னை | 960 | 21 | ஸ்ராவஸ்த்திரபுர I | 610 |
| 8 | பானந்தறை | 1765 | 22 | ஸ்ராவஸ்த்திரபுர II | 204 |
| 9 | ஹிங்குரக்கடை | 1000 | 23 | ஸ்ராவஸ்த்திரபுர III | 204 |
| 10 | அநுராதபுரம் | 1050 | 24 | நாத்தாண்டிய | 1200 |
| 11 | பதளை | 891 | 25 | மாத்தளை I | 1155 |
| 12 | கலடை | 1800 | 26 | மாத்தளை II | 356 |
| 13 | பலப்பிட்டிய | 989 | 27 | பொலன்நவை | 4680 |
| 14 | கெக்கிராவ | 1800 | | | |

01. தகைமைகள்

திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதிகூடிய விலையினை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய பொருட் களஞ்சியசாலைகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். .

02. <u>கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.</u>

பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி அதிகாரியிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும். ஒரு விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு பொருட் களஞ்சியசாலை மாத்திரமே விலை மனுகோரலினை சமர்ப்பிக்கலாம்.

03. <u>கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்</u> .

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு உணவகம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சியத்தின் பெயர் மற்றும் சதுர அடியினை குறிப்பிட்டு புகையிரத பொருட்களஞ்சியத்திற்கான விலை மனுக்கோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம் ஓல்கோர்ட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்னை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

<u>04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.</u>

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறப்பட்ட பொருட்களஞ்சியசாலைகளை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலைய அதிபரிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்

06. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

07. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909) /011-4600944

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஓல்கோர்ட் மாவத்தை ,
கொழும்பு 10.